

Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 10 Pages 4 | Sunday, 27 April 2008 | Free Copy

வவுனியா சந்தை அன்றும் இன்றும்

சுமார் 18 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வர்த்தகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான வியாபார கேந்திர நிலையமாக காணப்பட்ட வவுனியா பொதுச் சந்தை தற்போது மிகவும் அமைதியாக காணப்படுகிறது.

மீண்டும் வாழ்வோம் குழுவினரோடு நாம் வவுனியா சந்தைக்கு சென்ற போது வழமையாக சந்தைகளில் இருக்கக்கூடிய பரபரப்பு இரைச்சல் சன நெருக்கடி போன்றவை மிகவும் குறைவாகவே காணப் பட்டது.

இந்த சந்தையின் கடந்த கால நிலை குறித்து அங்கு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மரக்கறி வகைகளை மொத்தமாக விற்பனை செய்யும் நல்லசாமி செல்லத்துரை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.



வவுனியா சந்தை

வடக்கில் உள்ள விவசாய மக்களின் விளை பொருட்களை அங்கு கொண்டு வரும் நேரங்கில் இலங்கையின் சகல பாகங்களில் இருந்தும் வியாபாரிகள் பொருட்களை கொள்வனவு செய்த செல்வதற்காக அங்கு வருவார்கள் என்றும் அந்த நாட்களில் 10 முதல் 20 வரையான பார ஊர்திகளில் வியாபாரப் பொருட்கள் ஏற்றி செல்லப்படும் என்றம் அவர் கூறினார்

இப்பகுதி விவசாயிகள் தமது உற்பத்தி களை தென்பகுதிக்கு விற்பனை செய்வதன் மூலமாகவே பெருமளவு இலாபத்தை ஈட்டி வந்துள்ளனனர்.

அதே போல் தென்பகுதி மக்களும் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள் வதற்கு வடபகுதி விவசாய மக்களிலேயே தங்கியிருந்தனர்.

ஆனால் தற்போதைய நிலை அதற்கு எதிர்மாறாக இருக்கிறது என்றும் நல்லசாமி செல்லத்துரை தெரிவித்தார்

1990ம் ஆண்டிற்கு முனபு தமது வியாபாரம் காலை 8 மணிக்குள் வாத்தக நடவடிக்கைகள் முடிவடைந்து விடும் என்றம் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய்கும் அதிகமாக வியாபாரம் இடம் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் தற்போது மாலை 6 மணி வரையில் தாங்கள் வியாபாரம் செய்கின்ற போதி லும் அதிகளவு பணத்தை பெற முடிவ தில்லை என்றும் கூறினார்.

தற்போது வவுனியா சந்தையில் வியாபா ரம் இவ்வளவு மோசமாக பாதிக்கப்படும் நிலைமைக்கு பல்வேறு காரணங்கள் கூறப் படுகின்றன.

இருப்பினும் தென்பகுதியிலிருந்து வட பகுதிக்கு செல்லும் பிரதான பாதையில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடி மற்றும் மிக இறுக்கமான பாதுகாப்பு நட வடிக்கைகள் என்பனவே முக்கிய காரணம் என்று வியாபாரிகள் கூறுகின்றனர்.

கடந்த 20 வருடங்களாக வவுனியா சந் தையில் வியாபாரம் செய்து வரும் செல்வ ராஜா விவசாயிகளின் தற்போதைய நிலை குறித்து எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

விவசாயம் செய்யும் மக்களுக்கு பொருட்களை எல்லாம் விற்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் கடந்த வாரம் ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 6 ரூபா விற்கு விற்பனை செய்யப்பட்டதாகவம் தெரிவித்தார்

தோட்ட வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களில் பெண் தொழிலாளர்க ளுக்கு நாளொன்றுக்கு 350 ரூபாவும் ஆண் தொழிலாளர்களுக்கு 500 ரூபாவும் வழங் கப்பட வேண்டியுள்ளதாகவும் இதனால் விவசாயிகளுக்கு எந்த வருமானமும் கிடைக்காமல் கஸ்டப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து மக்களினதும் ஒரே கனவு சமா தானமாக இலங்கையே இலங்கையின் ஒவ் வொரு பிரஜையும் அவ்வாறன ஒரு நாளுக்காகவே காத்திருக்கின்றனர்.என்று வரும் என்று தெரியாத போதிலும் என்றா வது வரும் என்பதே அவர்களின் எதிர் பார்ப்பு.

வடக்கில் உள்ள விவசாய மக்களின் விளை பொருட்களை அங்கு கொண்டு வரும் நேரங்கில் இலங்கையின் சகல பாகங்களில் இருந்தும் வியாபாரிகள் பொருட்களளை கொள்வனவு செய்த செல்வதற்காக அங்கு வருவார்கள்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநூர் எப்.எம்.(FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

நிதர்சனமான உங்கள் நிகழ்வுகள் தகவல்களையும் உங்கள் பகுபாட்டுக்களையும் கலைந்து வாழுதி அனுப்புங்கள். அலசுவோம் மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

சுவடுகள்


✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படை யில் திரட்டப்பட்ட IASC 120ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 71,912குடும்பங்களைச் சேர்ந்த 257,071 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ ஏப்ரல் மாதம் 8ம் திகதி வரையில் மட்டக்களப்பில் 5640 குடும்பங்களைச் சேர்ந்த 21,201 பேர் அகதிமுகாம் களில் வாழ்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏப்ரல் மாதம் 3 மற்றும் 4ம் திகதிகளில் கிரான் பிரதேச செய லாளர் பிரிவைச் சேர்ந்த வாஹனேரி மற்றும் பொல்லுக் காடு பிரதேசங்களுக்கு 922 குடும்பங்களைச் சேர்ந்த 3607 பேர் மீள் குடியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது. மீள் குடியேறிவர்களுக்கான உலர் உணவு மற்றும் உணவல்லாத பொருட்களை ருரோஊக வழங்கியுள்ளது. திருகோணமலையில் ஏப்ரல் 4ம் திகதி பட்டித்திடல் அகதிமுகாமில் இருந்து 21 குடும்பங்கள் மூதூர் பள்ளிக் குடியிருப்பு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட சின்னக் குளம் கிராமத்தில் மீள் குடியேறுவதற்கான நடவடிக்கை கள் அரசாங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

✱ கிளிநொச்சி RDHS அறிக்கையின் படி கிளி நொச்சி மாவட்டத்திற்கான முதல் தொகுதி மருந்து பொருட்களை ஓமந்தை ஊடாக கொண்டு செல்வதற்கான போக்குவரத்து அனுமதியினை MOD வழங்கியுள்ளது.

✱ கிழக்கு மாகாணத்தில் வசிப்பிடமற்றவர்களுக்கு 1000ற்கும் மேற்பட்ட வசிப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு தேசிய வீடமைப்பு நிர்மாண சபை அறிவித்துள்ளது. 'நகனஹிர நவோதய செயல்திட்டம்' என பெயர் கொண்டு செயற்படவுள்ள இத்திட்டமானது இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய செயல்திட்டமாகும்.

பேசும் படம்



ஆபிரிக்காவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட கபீர் இனத்தவர்கள் 1600களில் இருந்து புராதான வரலாற் றைக் கொண்டவர்கள். இன்னமும் புத்தளத்தில் வாழும் இவ்வின அங்கத் தவர்கள் தமது கலாச்சாரத்தை பேணி வருகின்றனர். கபீர் பாடல்களை தமது தாய் மொழியான போத்துகீஸ மொழியில் பாடி மகிழ்கின்றனர்.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளி னால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர் களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

திருகோணமலையில் புது விடியலை ஏற்படுத்தியுள்ள சந்தை கட்டிட தொகுதி

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அனுராதபுரம் சந்தியில் புதிய சந்தைக் கட்டிடம்ஒன்று அண்மையில் திறந்து வைக் கப்பட்டுள்ளது



சந்தை கட்டிடத்தொகுதியின் முன்னைய தோற்றம்

கடந்த வருடம் செப்பரம்பர் மாத மத்தி யில் ஆரமிக்கப்பட்டமீள் கட்டுமான பணி கள் கடந்த மார்ச் மாத இறுதியில் நிறை வடைந்தன

இலங்கையில் உள்ள பாரம்பரி திறந்த சந்தை கட்டுமானங்களுடன் நவீன வசதிக ளையும் உள்ளடக்கியதாக இந்த சந்தை கட்டிட தொகுதி அமைக்கப்பட்டுள்ளது

இந்த சந்தைகட்டிடத்தின் கட்டுமான பணிகளுக்கான நிதிப் பங்களிப்பை அமெ ரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பான யு.எஸ்.ஏயிட் மற்றும் கிரேக்க நாட்டின் வெளிவிவாகர அமைச் சின் அபிவிருத்தி அமைப்பான ஹெல்நிக் ஏய்ட் ஆகியன கூட்டாக வழங்கியிருந்தன

தேவையுள்ள மக்களுக்கான அரச சார்பற்ற நிறுவனமான (People in Need) மற்றும் செக் அரசசார்பற்ற நிறுவனம் (Czech NGO)ஆகியன இந்த திட் டத்தை முன்னெடுத்திருந்தன.

ஊள்ளுர் சமூகங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை அதிரிப்பதற்கு இந்த புதிய சந்தைக் கட்டிடத் தொகுதி உதவியாக அமையும் என அனுசரணையாளர்கள் நம் பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த சந்தைக் கட்டிடத் தொகுதி யின் மீள் கட்டுமான பணிகள் பல் வேறு நோக்கங்களை அடிப்படை யாக கொண்டுள்ளதாகவும் ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னரான உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் பிராந்தியத்தின் பொருளாதார அபி விருத்தி ஆகியவற்றுடன் இங்கு வாழும் அனைத்து இன சமூகங்களுக்குமிடையில் ஒரு மைப்பாட்டை ஏற்படுத்தல் ஆகிய முக்கிய அம்சங்கள் என தேவையுள்ள மக்களுக்கான அமைப்பின் இலங்கைக்கான தலைவர் மற்றிக் ஸோவாக் தெரி வித்துள்ளார்

இம்மாதம் 4ம் திகதி இடம் பெற்ற புதிய சந்தைக் கட்டிட தொகுதியின் திறப்பு விழாவில் இந்த திட்டத்திற்கு உதவி வழங் கிய இரு அனுசரணையாளர் அமைப் புகளின் பிரதிநிதிகளுடன் திருகோண மலை மாவட்ட அரசாங்க அதிபர் மேஜர் ஜென்ரல் ரி.ரி.ஆர்.டி.சில்வா மற்றும் திரு கோணமலை மாநகராட்சி மன்ற தலைவர் கௌரி முகுந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட அமெரிக்கா வின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் பணிப்பாளர் ரேபேக்கா கோன் இந்த புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியான இலங்கையில் வாழும் மக்க ளின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்துவ தற்கு அமெரிக்கா மேற்கொண்டு வரும் பல்வேறு முதலீடுகளில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டார்

உள்ளுர் அதிகா ரிகள் மற்றும் பயனா ளர்களுக்கு சந்தை நிர் வாகம் மற்றும் சுகா தாரம் தொடர்பான பயிற்ச்சிகளை செக் அரசசார்பற்ற நிறுவனம் வழங்கி வருகின் றது பல்லின மக்கள் வாழும் திருகோண மலை மாவட்டத்தின் பிரதான சந்தைகளில் ஒன்றாக விழங்கும் இந்த சந்தையின் மீள் கட்டுமானம் இந்த பகுதி மக்களுக்கு பல் வேறு நன்மைகளை வழங்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது



சந்தை கட்டிடத்தொகுதியின் தற்போதைய தோற்றம்

உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் பிராந்தியத்தின் பொருளாதார அபிவி ருத்தி ஆகியவற்றுடன் இங்கு வாழும் அனைத்து இன சமூகங்களுக்குமிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல் ஆகியன முக்கிய அம்சங்கள்

வாழ்வின் வர்ணங்கள்

முதூர் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள, கிளிவெட்டி அரசாங்க மருத்துவ மனையில் சுகாதார பணியாளராக கடமையாற்றும் சே.பரமேஸ்வரி தனது வாழ்வின் வர்ணங் களை பகிர்ந்து கொள்கின்றார்.

சுகாதார தொண்டராக கடமையாற்றும் இவரின் வயது 27. இடம்பெயர்வுகள் பல பிரச்சனைகளை உருவாக்குவதா கவும் குறிப்பாக உறவுகளுக்கு இடையிலேயே பிரச்சனை கள் உருவாகும் நிலைமைகள் ஏற்படுவதாக கருதுகின்றார்.



உறவுகள் என்று சொல் லும் போது சிறு வயதி லேயே திருமணம் புரிந்து கர்ப்பம் தரிப் பது, அத்தோடு திரும ணம் ஆகாதவர்கள் கூட கர்ப்பம் தரிப்பது ஒரு பிரச்சனையாக உள்ளதாக கூறுகின் றார். சிறுவர்களை எடுத்துப் பார்த்தால் அவர்களுக்குரிய தொற்று நோய்கள் பரந்து காணப்படுவது அவர்களுடைய கல்வியில் ஏற்படும் பாதிப்பு என்பன ஒரு பிரச்சனையாக காணப்படுகிறது என தெரிவிக்கும் இவர் பெற்றோர்கள் பராமரிப்பின்மையால் பல வழிகளில் சிறுவர்கள் பாதிப்படைவதாகவும் கவலை தெரி விக்கின்றார். இதுவே மக்கள் அவர் தம் சொந்த இடங்களில் இருப்பார்களானால் உறவுகள் எல்லா வழிகளிலும் முன் னேற்றம் அடையும் என்பது இவரது நம்பிக்கை ஆகும்.

சாரம்

அன்மையில் திருகோணமலையில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக சம்பூர் உட்பட பல கிராமங்களில் இருந்த மக்கள் மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்தனர். மட்டக்களப்பு நகரிலிருந்து 5கி.மீ. தொலைவில் உள்ள மஞ்சன் தொடுவாய் அகதி முகாமில் வசிக்கும் மக்களிடம் முகாம் வாழ்க்கை எவ்வாறு உள்ளது என அவர்களிடம் வினவிய போது அவர் கள் பல கருத்துக்களை தெரிவித்த னர்.

நாவற்காடு கிராமத்தைச் சேர்ந்த ரவி என்பவர் கருத்து தெரிவிக்கை யில் தான் 8 ஏக்கர் காணியில் வயல் செய்து கொண்டு இருந்த வேளை எல்லோரையும் இணைத்து வய லுக்கு குடடிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டு இருந்த வேளையில் எல் லாவற்றையும் கைவிட்டு ஓட நேர்ந் ததாக தெரிவிக்கின்றார். மீண்டும் 6 மாதங்களின் பின் வந்து பார்த்த போது அந்த இடங்களில் நெல் எல் லாம் வளர்ந்து ஒன்றும் செய்ய முடி யாமல் இருந்தது தன் மனதை விட்டு என்றும் அகலாது என கவலை கொள்கின்றார். மேலும் அரசாங்கத் தால் கூட அந்த 8 ஏக்கர் நிலம் பயி ரிற்கான எந்த இழப்பீடும் கிடைக்காத ஏமாற்றம் இன்றும் அவரிடம் உள் ளது.

இது போல் பாதிக்கப்பட்ட பலர் இங்கு உள்ளனர். கல்விச் சான்றி தழ்களை தொலைத்து விட்டு நிற்கும் ரகு, ஆவணங்களை தொலைத்துள்ள சேகர் சுதன், ஆடு மாடுகள் வீடு என பலவற்றையும் இழந்துள்ள டிலோ போன்றவர்களுக்கு பதில் என்ன?

காணமால் போன 17 பேரை நினைத்து அவர்களின் நிலை என்ன ஆனதோ என பரிதவிக்கு இ.சிவ பாதன் போன்றோருக்கும் இங்கு மீண்டும் குடியமர்ந்து சீரழிந்துள்ள தமது கிராமத்தை மீள கட்டியெழுப்ப முனையும் இவர்களுக்கு காலம் நல்ல பதிலை கூற வேண்டும்.



மன்னார் ந

காலநிலை மாற்றங்களும் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும்

இலங்கையில் ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாக எதிர்வரும் இரு தசாப்தங்களில் கடல் நீர்மட்டம் 0.5 மீற்றரினால் உயர் வடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது

இதன்காரணமாக வறண்ட பிரதேசங்கள் மேலும் வறட்சியடையும் என்றம் நீர் தன்மை மிக்க பகுதிகள் மேலும் அதிக நீர் தன்மை கொண்டனவாக மாறும் என்றும் சர்வதேச காலநிலை மாற்றத்திற்கா மன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது

கடல் நீர் மட்டம் அதிகரிக்கும் போது வடக்கே யாழ் குடாநாட்டின் பெரும்பாலான பிரதேசங்கள் கடலுக்குள் மூழ்கும் அபாயம் ஏற்படும் என சாவ்தேச கால நிலை ஆய்வு மையத்தின் பதில் பணிப் பாளர் மொகான் முனசிங் தெரிவித்துள்ளார்

இலங்கையில் இடம்பெற்று வரம் உள் நாட்டு யத்தத்தை விடவும் காலநிலை மாற் றத்தால் ஏற்படும் பாதிப்புகள் மோசமாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை அண்மையில் சீனாவில் நடைபெற்ற போஒ அமைப்பின் கருத்தரங் கில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உலக நாடுகள் கல்வியி லும் தொழில் நுட்ப துறையிலும் அதிக முன்னேற்றம் கண்டு வருகின்ற போதிலும் பூமி வெப்பமடைதலை குறைப்பதற்கம் கால நிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவு களை தடுப்பதற்கும் தங்களை தயார்படுத்தி கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந் தார்.

இலங்கையில் பருவப்பெயர்ச்சி காற்று மழை செப்டெம்பர் மாதம் 'தொடக்கம் பெப்ரவரி மாதம் வரையுமே பெய்கின்றது வழமை.

ஆனால் உலகளாவி ரீதியில் ஏற்பட் டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக இம் மழை தற்போது வரை தொடர்ந்து பொழிந்த வன்னமே உள்ளது

கடும் மழை காரணமாக ஆற்று வெள் ளம் சாதாரண வெள்ளம் தீவர் வெள்ளம் என மூன்று வகையான வெள்ளங்களில் இலங்கையின் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இம்முறை பெற்று வரும் கடும் மழை காரணமாக கிழக்கு மாகாணத்திலும் நாட் டின் ஏனைய பாகங்களிலும் தீவர் வெள்ளம் ஏற்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரி லலாணி இம்புலான தெரிவிக்கின்றார்.

காலநிலை மாற்றம் பிழையான சுற்றாடல் முகாமைத்துவம் மனித அபிவிருத்தி காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் அடிக்கடி ஏற்படும் வெள் ளப் பெருக்கத்திற்கு அடிப்படை காரணங் கள் குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் மொஹமட் ஜவாஹரிடம் வினவிய போது.

அம்பாறையில் இருந்து காரைத்தீவை நோக்கி பயணம் செய்யும் போது காணப் படும்மேடு பள்ளம் நிறைந்த நில அமைப்பை காணமுடியம் என்றும் இது இயற்கையானதொரு வடகாலமைப்பை காட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று கரையோரப்பிரதேசங் களை ஊடறுத்து வடிகால்கள் காணப்படு கின்றன .

சாய்ந்தமருதில் சோனா அமைப்பு கல் முனைப் பிரதேசத்தில் நடராசா வாய்க்கால் என்ற அமைப்பு நிந்தவூரில் வெட்டுவாய்க் கால்கள் அமைப்பு. போன்ற வடிகாலமைப் புகள் இயற்கையாகவே நமது பகுதிகளில் ஆரம்பத்தில் காணப்பட்தாகவும் முறையாக திட்டமிடப்படாத செயற்பாடுகள் மூலமாக இயற்கை வடிகாலமைப்பு முறை மாற்றப்பட்டுள்ளதே தற்போயை வெள்ளப் பெருக்குகளுக்கு காரணம் என்று அவர் கூறினார்.

கொங்கிரீட் இடப்பட்டு அடிக்கடி பாதை கள் அமைப்பு வேலைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் சில இடங்க



ளில் வீடுகளின் வளவிற்குள் வருகின்ற நீர் எந்தவகையிலும் வழிந்தோட முடியாத அளவிற்கு அபிவிருத்தி திட்டங்கள் சென்று கொண்டிருப்பதாகவும் அவர் குறிப் பிட்டார்.

சட்டவிரோதமான செயற்பாடுகள் மூலம் மண்ணின் நீர் தாங்கு திறன் குறைந்து வரு கின்றது. மண் அகழ்தல் போன்ற நடவடிக் கைகளால் நீர் ஏந்தும் பகுதிக ளுக்கு மனி தர்கள் ஊறு விளை வித் திருப்பதாக அவர் தெரிவித் தார்.

வெள்ளத்தி னால் ஏற்படும் பேரழிவுகளை தவிர்க்கும் நோக்கில் செயல்படுத்த வேண்டிய முறைகளைப் பற்றி மொஹ மட் ஜவா ஹர் மேலும் தெரிவிக்கையில் ' ஒவ் வொரு பிரதேசத்திலும் வடிகால் அமைப்புகளுக்கு பொறுப்பான அதிகாரி களும் சிந்தித்து ஒரு குறிப்பிட்ட பகுதிற் குரிய நில அமைவு அதனுடைய உயரம், அதனு டைய வடிந்தோடும் தன்மை, அதன் இயற்கை வடிகாலமைப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு வடிகாலமைப்பு திட்டங் களை மேற்கொள்ளவேண்டும் என்று கூறி னார். வீடுகள் அமைப்பதாயினும் சரி ஏதா யினும் ஒரு கட்டிடங்களை அமைப்பதாயி னும் உரிய அதிகாரிகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பிரிவினரின் அனுசரணை களை பெற்று இவர்களுடைய கருத்துக்களைப் பெற்று அவர்க ளின் அனுமதியு டன் கட்டிடங் களை அமைக் கும் போது இவ்வாறான வெள்ள நிலை மைகளை பொது வாக தவிர்த் துக்கொள்ளலாம்' என்றும் அவர் கூறினார்

அரசாங்க மட்டத்தில் மட்டுமன்றி சாதாரண மக்களும் வெள்ளத்தவிர்ப்புக் கான அறிவைப்பெற்றிருக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத் தின் சுற்றாடல் மற்றும் வலுப்பிரிவின் உயர் அதிகாரி கலாநிதி ஆனந்தமல்லவந்திரி தெரிவிக்கின்றார்'.

மக்கள் காலநிலை மாற்றங்களை அறிந் திருத்தல் வேண்டும். காலநிலை மாற்றத்தி னால் ஏற்படும் விளைவுகளையும் அவர் கள் தெரிந்திருத்தல் வேண்டும். வடிகால மைப்பு முறை, பருவபெயர்ச்சி காலங்கள் அதன் தன்மைகள் பற்றி விளங்கி வைத்தல் அவசியம். வடிகாலமைப்பு முறை பாதிக் கப்பட்டால் ஏற்படும் விளைவுகளை அவர் களுக்கு கற்பிக்க வேண்டும். இந்த கல்வி அறிவை சிறுவயதிலிருந்து போதிப்பதன் மூலமாக பல அனர்த்தங்களை தவிர்க்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்

வெள்ளத்தினால் ஏற்படும் ஆபத்துக் களை தவிர்பதற்கு அனைவரும் திட்ட மிட்டு செயற்படுவதன் மூலமே தீர்வு காண முடியும் என்பதே அனைவரினதும் ஒருமித்த கருத்தாக உள்ளது.

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரயோகிக்கப்படக்கூடிய அனைத்து சர்வதேச நிய மங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபி விருத்தி உதவிகளை செயற்றிறனுடன் அமுல்படுத்துவதற்கு ஏதுவாக பின்வ ரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பமிட் டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையொப்ப மிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமுல்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார் பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ் சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

2. **பாரபட்சமின்மை:** இடவமைவு, இனம், பால்நிலை, சமூக அந்தஸ் த்து அல்லது மதம் என்பவற்றைக் கருதாது இனங்காணப்பட்ட தேவை களின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் உதவிகளை வழங்குகிறோம்.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற்படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்ட வலுவான ஆவணமோ அல்ல.

Embassy of the Federal Republic of Germany Colombo · Embassy of Switzerland · JAPAN Embassy of Japan · The Netherlands Embassy · British High Commission · Embassy of Sweden · European Commission · Australian Government AusAID · United Nations · NORWEGIAN EMBASSY · MOFAT Ministry of Foreign Affairs of the Republic of Korea · Canadian High Commission / Haut-commissariat du Canada · The United States Embassy

சொந்த மண்ணிற்கு மீள திரும்பும் அகதிகள்

யுத்த சூழ்நிலைகளால் பாதிக் கப்பட்டு வெளிநாடுகளில் குடி யேறியுள்ளோர் மீண்டும் சொந்த நாட்டிற்கு திரும்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஐழுஆ என்ற அரச சார்பற்ற நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு IOM நிறுவனத்தின் உதவியுடன் இலங்கைக்கு மீண்டும் வந்து குடியேறியுள்ள ஒரு தம்பதியினரின் நேர்காணல் இங்கு பகிரப்படுகின்றது.

உள்நாட்டு பிரச்சனைகள் காரணமாக சொந்த இடத்தைவிட்டு வாழ்ந்து மீண்டும் சொந்த மண்ணுக்கு திரும்பி IOM நிறுவனத்தின் உதவியுடன் கடை வியாபா ரம் செய்து வருகின்றார்கள் திருகோணமலை மாவட்டத் தின் திருக்கடலூர் பிரதேசத் தைச் சேர்ந்த கே.முருகையா மற்றும் அவரது மனைவி முருகையா காளியம்மா ஆகியோர்.

சர்பத், சோடா, இனிப்பு பொருட்கள், விளையாட்டு பொருட்கள் என கடையில் பல பொருட்கள் இருப்பதாகவும் இந்த கடையை அமைத்துக் கொடுத்த IOM நிறுவனத்தின ருக்கு அவர்கள் பெரிதும் நன்றி கூறுகின்றார்கள். இந்த கடையை ஒழுங்கான முறையில் கொண்டு நடாத்த வேண்டும் என்பதே இவர்களின் ஒரே நோக்கமாக தற்போது உள்ளது.

இவர்களிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு இவர்கள் அளித்த பதில்கள்:

நீங்கள் இடம்பெயர்ந்து சொந்த நாட்டிற்கே திரும்பி வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள் உங்களுடைய இடம் பெயர்ந்து போன வாழ்க்கையை பற்றி சொல்ல முடியுமா?

நாங்கள் இங்கிருந்து 1992ம் ஆண்டு யாழ்ப்பாணம் சென்றோம். பின் னர் யாழ்ப்பாணம் மூலமாக மன் னாரை அடைந்து அங்கிருந்து போட் மூலமாக இந்தியாவிற்கு சென்றோம். இந் தியா போய் தூத் துக்குடி மாவட்டத் தில் 16 வருடங்கள் வாழ்ந்தோம். 2004ம் ஆண்டு UNHCR இன் உதவியுடன் இலங்கைக்கு திரும்பி வந்தோம். இங்கு வந்த பின்பு தற்போது ஐழுஆ நிறுவனத்தின் உதவியுடன் வாழ்ந்து வருகின்றோம்.



கே.முருகையா

இந்தியா போய் தூத்துக்குடி மாவட்டத்தில் 16 வருடங்கள் வாழ்ந்தோம். 2004ம் ஆண்டு ருர்ஊசு இன் உதவியுடன் இலங்கைக்கு திரும்பி வந்தோம்.

IOM நிறுவனத்தின் உதவி உங்களுக்கு எப்படி கிடைத் தது?

அவர்கள் வந்து கஷ்டப் படுகிறவர்களை பார்த்தார் கள். அப்பொழுது நாங்களும் சென்று அவர்களை சந்தித்து நாம் படும் சிரமங்களை அறிவித்தோம். அவர்களிடம் உதவி கோரினோம். பின்னர் அவர்கள் உதவி செய்தனர்.

உங்களுக்கு IOM நிறு வனம் எவ்வாறான உதவி களை வழங்கி உள்ளது?

இடம் இல்லாத காரணத்தி னால் நாங்கள் முதலில் இடத்தை வாடகைக்கு எடுத் தோம். தகரம் போன்ற தேவையான பொருட்களை IOM நிறுவனம் தந்து உத வியது. ஏங்களை வர வழைத்து கூட்டங்கள் நடாத்தி எமக்கு வேண்டிய அறிவுரைக ளையும் ஆலோசன களையும் வழங்கி உதவியுள்ளார்கள்.




கே.முருகையா மற்றும் அவரது மனைவி முருகையா காளியம்மா

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்சியில் புதிதாக உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்சியி லும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ் வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின் றோம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்க ளால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலே இந்தக் குறு நாடகங்கள் அமைகின்றன. இதன் அடிப்படையில் பெண்களின் உரிமைகளை மையமாகக் கொண்டு அமைந்த 'உணர்வுகள்' குறுநாடகத்தின் தொகுப்பு.

குடி குடியைக் கெடுக்கும்



குமார் நீண்ட காலமாக குடிப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ள நபர். உடல் நிலை பாதிக்கப்பட்டு மனைவி இறந்து விட்டார். இவரது மகள் பவானி பாடசாலை செல்கிறாள். பவானி பரீட்சைக்காக பணம் கேக்கிறாள். வேலை முடிந்து வந்து தருவதாக கூறிச் சென்ற குமார் மாலையில் முழு போதையில் வீட்டுக்கு வருகிறார். மறுநாள் காலை யில் பவானி பணம் கேட்கும் போது குமார் கொடுக்க மறுக்கிறார். புவானி பணத்திற்க்கான தேவையை எடுத்துக் கூறியும் குமார் பணம் கொடுக்க மறுக்கிறார். அந்த நேரத்தில் குடிப்பதற்கு மட்டும் பணம் இருக்கிறதா என்று வேதனை கலந்த கோவத்துடன் கேட்கிறாள். குமாருக்கு கோவம் வருகிறது. இதற்க்கு மேல் நீ படிக்க வேண்டாம் இதற்க்கு மேல் உன்னை படிப்பதற்க்கு என்னிடம் பணம் இல்லை வீட்டில் இருந்து வேலைகளை பார்த்துக்கொள் என்று கூறுகிறார்.

பவானி தாய் தன்னுடன் இல்லாததை நினைத்து வேதனைப் படுகிறாள். குமார் கோவத்துடன் நான் உழைக்கிறேன் குடிக்கிறேன் இதில் எவருமே தலையிட முடியாது என்று கூறிச் செல்கிறார்.

தனது நிலமையை நினைத்து வேதனைப் பட்டு அழுது கொண்டிருக்கும் பவானியிடம் உறவினரான கமலினி பேசுகிறாள். நடந்தவற்றை தெரிந்து கொண்டு பவானிக்கு ஆறுதல் கூறுகிறாள். தனது தந்தை சாராயம் குடிப்பதை விடுத்து கசிப்பு குடிப்பதாகவும் இது அவரது உடலுக்கு தீங்கானது வயிற்று நோய்களை உருவாக்கும் என்றும் பவானி கமலினியிடம் கூறி வேதனைப் படுகிறாள். பவானி யின் நிலை கண்டு வேதனைப்படும் கமலினிக்கு குமார் மீது கோவம் வருகிறது. குடிகாரர்கள் மற்றவர்கள் சொல்லித்திருந்த மாட்டார்கள் தாங்களாக உணர்ந்து திருந்தினால் மட்டுமே உண்டு என்று ஆறுதல் கூறிச் சென்றாள்.

சில தினங்கள் கழித்து குமார் தொடர்ச்சியாக வாந்தி எடுக்க பவா னிக்கு பயம் வருகிறது. பதற்றப்படுகிறாள். குமாருக்கு தொடர்ச்சியான இருமலும் தொற்றிக்கொள்கிறது. குமார் தனக்கு வயிற்றில் வலி ஏற்பட்டுள்ளதாகவும் வயிறு எரிவதாகவும் உடல் பலவீனமாக இருப்ப தாவம் கூறுகிறார். பவானி குமாரை கட்டாயப் படுத்தி வைத்திய சாலைக்கு அழைத்து செல்கிறாள்.

மறுநாள் கமலினி குமாரின் உடல்நிலை பற்றி விசாரிக்கிறாள். கசிப்பு குடிப்பதனால் வயிற்றில் புண் ஏற்படும் குடல் எரிந்துவிடும் ஈரல் எரிந்து விடும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மருத்துவர் கூறிய விடயங்களை பவானி கூறுகிறாள். குடிப்பதனால் பணச்செலவும் உடல் வியாதிகளும் குடும்ப பிரச்சனைகளும் ஏற்படும் என்று கமலினி குமாருக்கு அறிவுரை கூறுகிறாள். குமார் புரிந்து கொள்கிறார். தனக்கு ஏதாவது நிகழ்ந்தால் தனது மகள் அநாதை ஆகிவிடுவாள் என்று வேதனைப் படுகிறார். தனது தவறை உணர்கிறார்.

இந்த நாடகத்தின் மூலம் குடி குடியையும் உடலையும் கெடுக்கும். பணம் கொடுத்து நோயை வாங்க வேண்டாம் என்ற கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதிக்கு உங் கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்ப காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினை யாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்சியின் எதிர் பார்ப்பாகும்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS · USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.